**வத்தேகம நகர சபை - 2024**

-----------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வத்தேகம நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வத்தேகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை

வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுகள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்குரிய மொத்தம் ரூபா 5,572,000 ஆன முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் மொத்தம் ரூபா 147,415,609 ஆக இருந்த போதும் மூலதனச் சொத்துக்களுக்கு வருமானளத்தில் பங்களிப்புக் கணக்கின் மொத்தம் ரூபா 147,294,706 ஆக இருந்தமையால் ரூபா 120,903 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகள் ஒப்பிடப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். |

#### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வவாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 3,671,760 ஆன 04 சொத்துக்கள் விடயங்களுக்குரிய. பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் பௌதீகுரீதியாக இருத்தல் தொடர்பான உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் | எதிர்காலத்தில் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதாக. | ஒவ்வொரு மீதியையும் சரிபார்க்க கோவைகள் மற்றும் ஆவணங்களை பராமரிக்கப்பட வேண்டும். |

போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | ஆதுனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடப்பட்டு வரி விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் புதிய மதிப்பீடு செயற்படுத்தப்படும் என்பதாக. | காலரீதியாக ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| | நி.பி 571(3) | 2019 முதல் 2022 வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட காலாவதியான ரூபா 113,970 பெறுமதி யான 32 நானாவித வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என்பதாக. | காலம் கடந்த வைப்புக்கள் தீர்வு வேண்டும். |
| (இ) | **2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| (i) | 6 ஆம் பந்தி | 2022 யூன் 22 ஆந் திகதி திணைக்களத்திடமிருந்து புதிய மதிப்பீடு கிடைத்திருக்கையில் புதிய மதிப்பீட்டை உள்ளடக்கி 25 கடைகளின் உடன்படிக்கை களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குத்தகையாளர் களுடன் புதிய உடன்படிக்கைகளில் ஈடுபட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ii) | 10 ஆம் பிரிவு | குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 07 கடைகளின் குத்தகையாளர்களால் வேறு தரப்பினருக்கு உப | குத்தகையாளர்களர் கள் அறிவுறுத்தப் பட்டுள்ளதாக. | உப குத்தகை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | | வேலண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,706,039 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,527,690 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மூலம்** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரியும் வரியும் | 5,771,000 | 5,781,359 | 4,593,778 | 3,008,553 | 5,771,000 | 2,709,148 | 888,175 | 1,820,972 |
| (ii) | வாடகை | 7,568,800 | 10,811,592 | 10,678,223 | 137,336 | 7,685,800 | 185,808 | 181,841 | 3,966 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,175,000 | 1,241,970 | 1,238,970 | 3,000 | 1,197,000 | 30,000 | 30,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 27,695,000 | 35,541,536 | 28,790,217 | 9,346,473 | 26,043,000 | 10,393,113 | 7,797,959 | 2,595,154 |
| | மொத்தம் | 42,209,800 | 53,376,457 | 45,301,188 | 12,495,362 | 40,696,800 | 13,318,069 | 8,897,975 | 4,420,092 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,008,553 ஆக இருந்தது. அதில் ஒரு அலகிலிருந்து வீதவரி நிலுவை ரூபா 10,000 ஐ மிகைத்த 36 வீதவரி அலகுகளில் இருந்து மொத்தம் ரூபா | எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 737,889 தொகையான நிலுவை மீதியொன்று இருந்தது. | | |
| (ii) | வீதவரி பதிவேட்டில் காணி மற்றும் வீடுகள் என குறிப்பிடப்பட்டிருந்த 21 ஆதனங்களில் தெரிவு பரிசோதனையின் போது வியாபார கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடத்திச் செல்லப்பட்டிருந்த போதும் சபையினால் குறித்த கட்டிடங்கள் தற்காலிக மதிப்பீடு ஒன்றையோ அல்லது பெற்றுக்கொண்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்துடன் அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக நடவடிக்கை எடுப்பதாக. | ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 8,773,190 ஆக இருந்ததுடன் அதில் ஒரு அலகு நீர்க் கட்டண நிலுவை ரூபா 10,000 இணை மிகைத்த 250 நீர்க் கட்டண அலகுகளிலிருந்து மொத்தம் ரூபா 5,109,205 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை நீர்க்கட்டிணங்கள் விரைவில் அறவிடுவதற்கும் துண்டிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை நீர்க் கட்டிணங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபைக்கு சொந்தமான 03 நீர் செயற் திட்டங்களில் 765 நீர் பாவனையாளர்களுக்கு நீர்மானி பொருத்தப்படாதிருந்ததுடன் நிலையான கட்டணம் என்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது | வடிகட்டி ஊடகங்களை நிறுவுவதற்கும் நீர் மானிகளை நிறுவுவதற்கும் உரிய செலவினை ஈடுகட்ட முடியாதுள்ளதாக. | நிர்மானி பொருத்தப்பட்டு நீர் கட்டணங்கள் அறவிடப் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய கண்டி தென்ன விளையயாட்டரங்குங்கு அண்மையில் காணியில் 17 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியிருப்பதுடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கை ஒன்று பின்பற்றாமல் மீளாய்வாண்டில் 03 அபிவிருத்தி திட்டங்கள் மூலம் ரூபா 1,750,000 தொகை செலவிடப்பட்டு அக்காணியில் வீதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. | காணியை சட்டரீதியாக கையளிப்பதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 9,724,245 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 2,545,593 ஆகவும் 03 இற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 104,850 ஆக இருந்தது. | சபை கலைக்கப்பட்டதால் செயற்திட்ட முன்மொழிவுகள் நிறுத்தப்பட்டமை. | நீண்டகாலம் காணப்படும் கடன் கொடுத்தோர் மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டில் விபத்திற்குட்பட்ட டெக்கோ இயந்திரம் தொடர்பாக நிதி பிரமாணம் 104(4) பரிசோதனையை பூர்த்தி செய்து தேவையான நடவடிக்கை எடுக்காமை காரணமாக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குறித்த இயந்திரம் திருத்தம் செய்யப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது. | பரிசோதனை பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்படுத்துவதாக. | பரிசோதனைகளை பூர்த்தி செய்து சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை அலுவலக கட்டிடத்தின் பின்னால் அமைந்துள்ள பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வாகன தொகுதி நிர்மாணம் இடை நடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் பல வருடங்களாக மழைநீர் சிந்துவதால் கொங்கிரீட்டிற்காக இடப்பட்டிருந்த வெளிப்பரப்பில் திறந்துள்ள கம்பிகள் உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது வாகன தொகுதி நிர்மாணம் பூர்த்தி செய்யாமை காரணமாக சபைக்கு சொந்தமான வாகனங்கள் பாதுகாப்பற்ற வகையில் திறந்தவெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | வாகன தொகுதியின் நிர்மாணத்தை எதிர்காலத்தில் ஆரம்பிப்பதாக. | நிர்மாணத்தை விரைவில் ஆரம்பித்து சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை VI ஆம் பகுதியின் 83.1 இன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங் களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2019 முதல் 2024 வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 35 கட்டிடங்களுக்காக | விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | குடியிருப்பிற்காக பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்களை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (உ) | சபைக்கு சொந்தமான 18 காணி மற்றும் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதாக. | .காணி கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 5,573,125 கூட்டுத்தொகையான 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 05 இற்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இருந்து விளைவற்ற வகையிலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | எதிர்காலத்தில் கைதவிர்ப்பதற்கு அல்லது பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | திருத்தி அமைத்து பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது அதில் 06 பதவிகளில் 07 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 06 மிகைகளும் காணப்பட்டன. | உயர்மட்ட மகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டியதுடன். | மிகைகள் முகாமைத்துவம் செய்யப்பட்ட வேண்டும. |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) இலக்க 118 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | மலக் கழிவுகளை வெளியேற்ற இடமொன்று இல்லையென்பதாக. | சிக்கல்களை தீர்வு செய்து பொது மக்கள் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 03 நீர் செயற் திட்டங்களில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் பரிசோதனைகள் அறிக்கைகளின் பிரகாரம் குடிப்பதற்கு பொருத்தமான நிலைமையில் இல்லாத நீர் பகிர்ந்தாளிக்கப்பட்டிருந்ததுடன் நீர் சேகரித்து | வடிகட்டி முறைமையை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக. | நீரைச் சுத்திகரித்து சுத்தமான குடிநீர் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

வைக்கப்படக்கூடிய நீர் களஞ்சியங்கள் மற்றும் சுத்திகரிப்பு பிரிவு இல்லாமல் இருந்ததுடன் மழைக்காலங்களில் நீர் ஊற்றுக்களில் கலங்கிய நீர் சேர்தல் காரணமாக சுத்தமான குடிநீரை வழங்க முடியாது இருந்தது.

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் விதிகளின் படி, சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை அடைய நடவடிக்கை எடுக்கவில்லை. | நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |